எம்.சி.ஓ.பி எண்: : 4866,4868/2024 தேதி: 07.04.2026

மசா. : 2

பெயர் : மீனலோஷனி

த/பெ. : குமார்

வயது : 33

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 6 முதல் 12 வரை தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்படுத்திய உடன் செஞ்சி அரசு மருத்துவமனையின் முதல் சிகிச்சை பெற்றேன். அதற்கான விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்யவில்லை. ரூபாய் 4 லட்சம் பில் செலவானதாக பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தொடர்சிசிக்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. Allsec Technologies சீனியர் ஆபிஸராக வேலை பார்த்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வருமான இழப்பிற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 7,8,9 ல் கூறியுள்ள விவரங்களுக்கு ஆதாரவாக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பத்தி 11,12,13 கூறியுள்ள விவரங்களுக்கு ஆதாரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்தினால் எனக்கு சாதராண காயங்கள் ஏற்பட்டது என்றாலும் எனக்கு முழுவதும் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் சீட் பெல்ட் அணியாமல் காரில் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.